

ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, வார்டு எண் 26 கள்ளு பிள்ளையார் கோயில் வீதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொடக்கப்பள்ளி வகுப்பறை கட்டிடத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து மாணவ, மாணவிகளுக்குபுத்தகங்கள்வழங்கினார். நிகழ்வில்மாவட்டஆட்சித்தலைவர்ராஜகோபால்சுன்கரா, மேயர்நாகரத்தினம்சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புள்ளான்விடுதி அரசு உயர்நிலைப் பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின்கீழ், கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (04.01.2025) அன்று துவக்கிவைத்தார். உடன் அறந்தாங்கி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜயகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### ஆடுதுறை உத்திராபதி - எண்கண்.மணி சிறப்புரை!

# திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில் தெருமுனை பிரச்சாரம்!

### பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

திருவாரூர், ஜன . 8 -

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில், மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் தொடங்கப்பட்டது.

முதல் கூட்டத்தை கொரடாச்சேரியில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையேற்று கூட்டங்களை தொடங்கிவைத்தார். மாநில இலக்கிய அணியின் துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி, தலைமைக் கழகப் பேச்சாளர் மன்னை சோம. இளங்கோவன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், மாவட்ட அமைப்பாளர் புலவர் எண்கண்.மணி உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை ஏற்றனர்.

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி எதிர்வரும் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறும் இலக்கில், இலக்கிய அணியின் பங்காக திருவாரூர் மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் ஆலோசனைகளின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா, திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான சாதனைகள் உள்ளிட்ட தெருமுனை பிரச்சார கூட்டங்கள் தொடங்கியது.

கொரடாச்சேரியில் தொடங்கிய இந்த பிரச்சாரப்பயணத்தை மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்று தொடங்கி வைத்தார். ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், மாவட்ட அமைப்பாளர் எண்கண்.மணி உள்ளிட்டோர் முன்னிலையில் மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி, மற்றும் துணை அமைப்பாளரும், தலைமைக் கழக பேச்சாளருமான மன்னை சோம. இளங்கோவன் பங்கேற்று முதல் பிரச்சாரத்தை துவக்கி வைத்து, கொரடாச்சேரி மற்றும் அம்மையப்பன், கண்கொடுத்தவனிதம் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் செய்து பேசினார்.

மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் தொடர்ந்து ஒரு மாதம் நடைபெறும் இந்த தெருமுனை பிரச்சாரங்களில் செல்வி.கனிமொழி உள்ளிட்ட கழக இளம் பேச்சாளர்களுடன், தலைமைக் கழக பேச்சாளர் மன்னை சோம. இளங்கோவன் மற்றும் மாவட்ட இலக்கிய அணியின் மாவட்ட தலைவர் அண்ணாதாசன், துணை தலைவர் தியாகராஜன், துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், பாலமுத்து, நல்லாசிரியர் செல்லத்துரை, தங்க.குணசேகரன், சோமசுந்தரம் ஆகியோர் பங்கேற்று பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.



திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில், மாவட்டம் முழவதும் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரச்சாரங்களை கொரடாச்சேரியில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையேற்று கூட்டங்களை தொடங்கி வைத்தார். மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி, தலைமை கழக பேச்சாளர் மன்னை சோம.இளங்கோவன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். ஒன்றிய செயலாளர் ஆர். பாலச்சந்திரன், மாவட்ட அமைப்பாளர் புலவர் எண்கண்.மணி மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை ஏற்றனர்.



கோவை தெற்கு மாவட்டம் வெள்ளலூர் பேரூர் கழகம் மற்றும் இளைஞர் அணி சார்பில் தொடர் நிகழ்ச்சியாக தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் புரோ கபடி போட்டியை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் வெள்ளலூர் பேரூர் கழக செயலாளர் ராஜு ஒன்றிய செயலாளர் விஜய் சேகரன், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், பட்டணம் செல்வகுமார் கலங்கல் சிவகுமார், மாணவரணி பிரபு மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்ட கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம். 'சென்னையில் இம்மாதம் 18ம் தேதி நடைபெற இருக்கும் கழக வழக்கறிஞர்கள் மாநாடு குறித்து. 'சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கழக சட்டத்துறை இணைச் செயலாளர். கே.எஸ். ரவிச்சந்திரன் கலந்து கொண்டு பேசினார் மற்றும் மாவட்டக் கழக செயலாளர்கள். எஸ்.ஆர். சிவலிங்கம். (சேலம் கிழக்கு) டி.எம். செல்வகணபதி எம்.பி. (சேலம் மேற்கு). மற்றும் மாவட்ட நிர்வாகிகள். ராம்பிரகாஷ்.மாவட்ட அமைப்பாளர். துரைராஜ். வி.சி. சீனிவாசன். மாநகர அமைப்பாளர். உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சட்டசபையில் நடந்த நிகழ்வுகளுக்கு

# ஆளுநர் ஆர்.என்.ரவி மன்னிப்புக் கேட்கவேண்டும்!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

சென்னை, ஜன.8-

தேசிய கீதத்தை அவமதிக்கும் எண்ணம் தமிழ்நாடு அரசுக்கு எப்போதும் இருந்தது இல்லை என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டின் முதல் சட்டசபை கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்றது. இந்த முதல் கூட்டத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்த இருந்தார். இந்த நிலையில் சட்டசபைக்கு வந்த சிறிது நேரத்தில், உரையாற்றாமல் அவையில் இருந்து கவர்னர் புறப்பட்டுச் சென்றார். இதனால், அவையில் பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு தேசிய கீதம் பாட வேண்டும் என்று கவர்னர் ஆர்.என். ரவி கூறியுள்ளார். ஆனால் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. இதற்கு அதிருப்தி தெரிவித்து கூட்டம் தொடங்கிய 3 நிமிடத்தில் சட்டசபையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி புறப்பட்டுச் சென்றார். இந்த நிலையில் தமிழக சட்டமன்றத்தின் மரபுகளை மாற்ற கவர்னர் முயற்சிக்கிறார் என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.



சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறும் போது, "அரசின் சாதனைகளை வாசிக்க மனமில்லாமல், ஒரு நாடகத்தை கவர்னர் அரங்கேற்றி உள்ளார். கவர்னர் உரையை வாசித்தால் அரசின் சாதனைகளை அடுக்க வேண்டியிருக்கும் என்பதால் அவர் புறக்கணித்து விட்டார். நாட்டுப்பற்றுக்கு அவர்கள் தான் குத்தகைதாரர்கள் என்பதுபோல் நடந்து கொள்கின்றனர்.

தமிழ்நாடு சட்டசபையில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் பாடுவதுதான் மரபு. தேசிய கீதத்தை அவமதிக்கும் எண்ணம் தமிழ்நாடு அரசுக்கு எப்போதும் இருந்தது இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விட தான் பெரியவர் என்ற மனநிலையில் கவர்னர் செயல்படுகிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தின் மரபுகளை மாற்ற கவர்னர் முயற்சிக்கிறார். சட்டசபையில் நடந்த நிகழ்வுகளுக்கு கவர்னர் மன்னிப்பு கேட்க வேண்டும். தேசிய கீதம் பாடும்வரை காத்திருக்காமல், தேசிய கீதத்தை அவமதித்ததே கவர்னர் ஆர்.என்.ரவிதான்" என்று கூறினார்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர், டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!

சேலம், ஜன. 8-

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் வருகின்ற 09.01.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் எடப்பாடி, PVT பங்க் அருகில், சேலம் மெயின்ரோட்டில் அமைந்துள்ள "ஸ்ரீ வெங்கடேஷ்வரா மஹாலில்" மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி, சிறுபான்மை நலக்குழு உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



பொருள் : 1) தமிழர் திருநாள் - தைத்திங்கள் தமிழ் புத்தாண்டு சம்பந்தமாக, 2) கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர்

# வண்ணை அரங்கநாதன் தாயார் திருமதி பட்டம்மாள் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜன.8-

கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் - தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன் தாயார் திருமதி பட்டம்மாள் (வயது-96) அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2025) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பட்டம்மாள் அவர்களின் இறுதி ஊர்வலம் சென்னை பழவந்தாங்கல் அவரது இல்லத்தில் (சென்னை நங்கநல்லூர், பக்தவச்சலம் நகர் 15வது தெரு) இருந்து நேற்று புறப்பட்டு, பழவந் தாங்கலில் உள்ள ஈடு காட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.



நாகை மாவட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் தமிழக வெற்றிக் கழக நாகை நகரக் கழகச் செயலாளர் செந்தில்குமார் தலைமையில் அக் கட்சியைச் சேர்ந்த 19 வது வார்டு செயலாளர் மோகன், 23 வது வார்டு செயலாளர் சுரேஷ்குமார் ஆகியோர் அக் கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட்ட கலைஇலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை, நகர கழக துணைச் செயலாளர் வெற்றிலை கடை சிவா, வார்டு கழக செயலாளர் ஐய்யாவு கணேசன் ஆகியோர் உள்ளனர்.



கோவை மாவட்டம் திருமலையாம்பாளையம் பேரூராட்சி 5வது வார்டு கிளை கழகத்தில் மாற்று கட்சிகளைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக்கொண்டனர் இளைஞர் அணி விஜய் ஏற்பாட்டில் திருமலையாம்பாளையம் பேரூர் கழக செயலாளர் ராமராஜ் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேரூர் கழக பொருளாளர் ரத்தினசாமி, கவுன்சிலர் திருவை சிலம்பு நாகராஜ், ஹரிஹரன், அபி பொதுக்குழு உறுப்பினர், ரகு துரைராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.